மார்ச் 1 பேராற்றல் பிறந்த நாள்!



திராவிட முன்னேற்றக் கழகம் என்பது வெறும் அரசியல் கட்சியல்ல. அது ஒரு குடும்பம், ஒரு பண்பாடு,ஒரு வரலாறு.அந்த வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் தனது வியர்வையையும், குருதியையும் சிந்தி,இன்று தமிழகத்தின் அச்சாணியாகத் திகழ்பவர் நமது தளபதியார்.

பேரறிஞர் அண்ணா 'திராவிட நாடு' கோரிக்கையை முன்வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் கல்லக்குடி போராட்டத்தில் தண்டவாளத்தில் தலை வைத்த அந்தப் போராட்டக் களத்தின் சூட்டிலேயே பிறந்தவர் நம் தளபதியார்.ஒரு போராளியாகவே அவர் வளர்ந்தார்.

அரசியல் அதிகாரம் என்பது ஏதோ ஒரு நாளில் தட்டில் வைத்து அவருக்கு வழங்கப்பட்டதல்ல. நெருக்கடி நிலை காலத்தில், தந்தை பெரியாரின் கொள்கை வழியில், பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில், முத்தமிழறிஞர் கலைஞரின் கட்டளை ஏற்று, 'மிசா' சிறைக் கொடுமைகளை சந்தித்தவர் நம் தலைவர். சென்னை மத்திய சிறையில் அன்றைய ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளைத் தாங்கி நின்று வீரத் தியாகிகளின் இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு அது.சிறு வயதிலேயே சிறைக்கதவுகளைத் தகர்த்தெறிந்த தளபதியாரின் மனவுறுதிதான்,இன்று தமிழகத்தை வழிநடத்தும் பேராற்றலாக உருவெடுத்துள்ளது.

கழகத்தின் பொருளாளர்,செயல் தலைவர்,தலைவர் எனப் படிப்படியாக வளர்ந்த நம் தளபதியார், சென்னை மாநகராட்சியின் மேயராகப் பொறுப்பேற்றார் சென்னை சிங்கார சென்னை ஆகியது. இன்று அவர் முன்னெடுக்கும் 'திராவிட மாடல்' என்பது, தந்தை பெரியாரின் சமூக நீதியையும், அண்ணாவின் மாநில உரிமையையும், கலைஞரின் நவீன கட்டுமானத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தத்துவமாகும்.இந்த தத்துவம் இன்று தமிழ் நாட்டை முன்னோடி மாநிலமாக மாற்றியுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'உழைப்பு... உழைப்பு... உழைப்பு... அதுவே ஸ்டாலின்' என்று நமது கழகத் தலைவருக்கு சூட்டிய மகுடம் இன்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது. பதவியைப் பொறுப்பாகக் கருதி, ஓய்வறியாமல் உழைக்கும் தலைவரின் வேகம்,நம் போன்ற தொண்டர்களுக்கு எப்போதுமே உற்சாக டானிக்!

தந்தை பெரியார் விதைத்த விதையும்,பேரறிஞர் அண்ணா வளர்த்த கொள்கையும், முத்தமிழறிஞர் கலைஞர் காத்து வளர்த்த இயக்கமும் - இன்றைக்கு தலைவரின் தலைமையில் மக்களின் வாழ்வோடு கலந்த திராவிட மாடல் ஆட்சியாக ஐந்து ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.'திராவிட மாடல்' என்பது வெறும் ஆட்சிமுறை அல்ல, அது மனிதநேயம், சமத்துவம், சுயமரியாதை ஆகியவற்றின் உயிரோட்டம் என்பதை நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஒட்டுமொத்த தேசத்துக்கும் தெளிவாக புரியும்படி பாடம் எடுத்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொன்னான ஆட்சி காலத்தில் தமிழ்நாடு தலை நிமிர்ந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் திகழ்கிறது. கல்வி,சுகாதாரம்,தொழில், பெண்கள் முன்னேற்றம், சமூகநலம் என எந்த துறையை எடுத்தாலும் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாக உயர்ந்துள்ளது. நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மூலம் கோடிக்கணக்கான பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் வழங்கி பெண்களின் வாழ்க்கையில் ஒளியாய் விளங்கும் நமது தலைவர், மாணவ, மாணவியர் கல்வியில் சிறக்க காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம்,புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன்,மகளிர் விடியல் பேருந்து பயணம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேரடியாக நன்மைகளை சேர்த்துள்ளார்.இந்த 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் பயன்பெறாத குடும்பமோ, தனிநபரோ இல்லை என்று சொல்லக்கூடிய வகையிலே திறம்பட ஆட்சி செய்துள்ளார் நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.

கடந்த 'தமிழ்நாடு ரவுண்ட் டேபிள்' நிகழ்ச்சியில் நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முழங்கிய அந்த வார்த்தைகள் இன்றும் நம் காதுகளில் ஒலிக்கிறது. 'Numbers Speak' என்று அவர் குறிப்பிட்டதை போல, தமிழகத்தின் 11.19% பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் புள்ளிவிவரம் அல்ல,அது ஐந்தாண்டு காலம் ஓய்வின்றி உழைத்த நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இரத்தமும் வியர்வையும் கலந்த சாதனை.ஒன்றிய பாசிச பாஜக அரசு எத்தனை முட்டுக்கட்டைகள் போட்டாலும், நிதிப் பகிர்வில் அநீதி இழைத்தாலும், 'தமிழகம் இந்தியாவின் வளர்ச்சிக்கான என்ஜின்' என்பதை நிலைநாட்டிய நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிர்வாகத் திறமைக்கு இந்தியாவே தலைவணங்குகிறது.

தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை முடக்க நினைத்த எதிரிகளின் சதியை முறியடித்து, 'என் மக்களுக்கு நான் தரும் ஆயிரம் ரூபாயை தடுத்தால் நான் 5000 ரூபாயாக தருவேன்' என்று நெஞ்சுறுதியோடு பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான தொகையோடு கோடைக் காலச் சிறப்புத் தொகுப்பாக 5,000 ரூபாயை முன்கூட்டியே வழங்கியது கண்டு ஒட்டுமொத்த NDA கூட்டணியும் அரண்டு போனது. அதற்கும் மேலாக, 'அமையப்போகிற திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உரிமைத் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்' என்ற தலைவரின் அறிவிப்பு தாய்க்குலங்களின் வயிற்றில் பாலை வார்த்து 2026 தேர்தல் வெற்றிக்கான அச்சாரமாக அமைந்துவிட்டது.

பாதம்தாங்கி பழனிச்சாமி கருணைத்தொகை தருவதாக கூறுகிறார், திராவிட பேரரசரோ அது மகளிர் உரிமை தொகை என்றார்.மேலும் மகளிர் வெறும் பயனாளிகள் மட்டுமல்ல அவர்கள் மாநிலத்தின் வளர்ச்சியில் பங்குதாரர்கள் என்று சொல்லுவதிலேயே நாட்டு மக்களின் மேல் அவர் கொண்டுள்ள பாசத்தை நாம் அறியலாம்.

"தேர்தல் களத்தில் திமுகதான் ஹீரோ"என்று அவர் விடுத்த சூளுரையை ஏற்று, களப்பணியாற்ற தொடங்கிவிட்டது கழகத்தின் தொண்டர் படை. 75,032 வாக்குச்சாவடிகளிலும் நமது கழகக் கட்டமைப்பு இரும்புக் கோட்டையாக நிற்கிறது. எதிர்க்கட்சிகள் எத்தனை திசைதிருப்பல்களைச் செய்தாலும், தமிழக மக்கள் 'ஓரணியில் தமிழ் நாடு' என்ற உணர்வோடு திமுக தலைமையிலானகூட்டணியின்பின்னால்தான் அணிவகுத்து நிற்கிறார்கள்.

தளபதியாரின் அனுபவமும், அவர் கடந்த வந்த கரடுமுரடான அரசியல் பாதையும், கள எதார்த்தத்தை உணர்ந்து அவர் எடுக்கும் முடிவுகளுமே 2026ல் திமுக கூட்டணிக்கு 200க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்று வரலாற்று வெற்றியை ருசிக்க செய்ய உள்ளது.2026 சட்டமன்றத் தேர்தலில், நமது தலைவரின் தலைமையிலான INDIA கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் மாபெரும் வெற்றி பெற்று, 7 ஆம் முறை கோட்டையில் வெற்றிக் கொடியை ஏற்றுவோம்!

திராவிட மாடல் 2.0 ஆட்சி என்பது உறுதி செய்யப்பட்ட வரலாறு.

அயோத்திதாசப் பண்டிதர் முதல் அண்ணல் அம்பேத்கர் வரை, பெரியார் முதல் அண்ணாகலைஞர் வரை அவர்களின் வழியில் சமூக நீதியைக் காக்கும் சமரசமற்றப் போர்வாளே!

நீங்கள் நூறாண்டு கடந்து வாழ்ந்து, இந்த தமிழகத்தை இந்தியாவின் ஒளிவிளக்காக மாற்ற வேண்டும்.

திராவிட இயக்கத்தின் கருப்புச் சட்டைப் படையில் ஒரு சாமானியத் தொண்டனாகத் தன் பயணத்தைத் தொடங்கி, இன்று இந்தியாவின் திசைகாட்டும் நாயகனாக உயர்ந்து நிற்கும் தளபதியாரின் பிறந்தநாளில், கோடி சூரியப் பிரகாசத்துடன் கழக உடன்பிறப்புகளான எங்கள் வாழ்த்துகளை சமர்ப்பிக்கிறோம்!

மார்ச் 1ல் அவதரித்த மாமணியே!

நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் கருத்தியல் வாரிசே!

திராவிடப் பேரரசரே!

உமக்கு ஒரு ராயல் சல்யூட் !

'200 நிச்சயம்! 200க்கும் மேல் வெல்வது லட்சியம்' என்ற தங்களின் முழக்கத்தையே கட்டளையாக ஏற்று செய்து முடிப்போம்!

வென்று காட்டுவோம்!

ஸ்டாலின் தொடரட்டும்!

தமிழ்நாடு வெல்லட்டும்!

என்றும் கழகதலைவர் வழியில்

முனைவர்.பி.பழனியப்பன்
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

கடலூர், மார்ச் 1 –

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியாவின் மாபெரும் ஜனநாயக பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தற்போது வரை சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தொடர் வெற்றிகளை கழகத்திற்கு பெற்றுத் தந்ததுடன், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் காண்போர் வியக்கும் வகையில் உயர்த்தியிருக்கிறார்.

அவர் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றதில் இருந்து "எல்லோருக்கும் எல்லாம்" என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், உலகத்திற்கே முன்மாதிரியாக விளங்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள், கல்லூரி மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக விலையில்லா மடிக்கணினிகள். அன்புக்கரங்கள் திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புச்சோலை, பணிபுரியும் மகளிர் நலனுக்காக தோழி விடுதிகள், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன், கலைஞரின் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 என எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு மக்களின் பொருளாதாரம் மேம்பாட்டுக்காகவும், இளைய தலைமுறையின் வளமான எதிர்காலத்திற்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, எதிர்க்கட்சியினரும் பாராட்டும் வகையில் திராவிட மாடல் பொற்கால ஆட்சியை நடத்தி வரும் தி.மு.க தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் இன்று (மார்ச் 1ஆம் தேதி) கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் கிளைக் கழக அமைப்புகள் தோறும் கழக கொள்கை பாடல்களை ஒலிபரப்பியும், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

மேலும் ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடிகளை புதுப்பிப்பது. புதிய கொடி களை ஏற்றி வைப்பது, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்கு பயனுள்ள புதிய புத்தகங்களை வழங்குவது. கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்வது என கட்சி வளர்ச்சிக்காகவும்,

ஏழை எளிய மகளிர், முதியோர், ஆதர வற்றோர், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது என கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை அவரவரால் இயன்ற நற்பணிகளை செய்து மக்கள் பயனுறும் வகையிலும் கொண்டாட வேண்டும் என கழக செயல்வீரர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பேராசிரியர் மா.இளஞ்செழியன்
மார்ச் 1 (2009)

தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் 'போர்வாள்' சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் 'தமிழன் தொடுத்த போர்', 'அறிஞர் அண்ணாதுரை', 'ஈரோட்டுப் பாதை' ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இளஞ்செழியன் நடத்திய 'போர்வாள்' ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.

"இளஞ்செழியன் எழுதிய 'தமிழன் தொடுத்த போர்' என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் ஏற்பாடு!

முதல்வர் பிறந்தநாள்: 500 பேருக்கு அறுசுவை உணவு!

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,மார்ச்.1-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மார்ச் 1, கழக தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதியில் இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் ஏற்பாட்டில் மீன் வியாபாரம், காய்கறி வியாபாரம் செய்யும் மகளிர்களுக்கு சீருடை வழங்குதல் மற்றும் 500 நபர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்வு கொட்டிவாக்கம் மீன்மார்க்கெட் அருகில் 01.03.2026 (ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்தரமேஷ், மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன், மாநில இலக்கிய அணி பொருளாளர், சோழிங்கநல்லூர் தொகுதி பார்வையாளருமான என். சந்திரபாபு, தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணை செயலாளர்கள் பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், சோழிங்கநல்லூர் கிழக்குபகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன்,

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன், சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண்குமார், வட்டக கழக செயலாளர் கே.வி.சாந்தப்பன், பகுதி அவைத்தலைவர் எஸ்.ஜானகிராமன், பகுதி பொருளாளர் எம். பாஸ்கரன், பகுதி துணைச் செயலாளர் ஜி.விஜயகுமார் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பார்த்தசாரதி, இ.சீனு, பிரேம்குமார், காந்தா, குப்பன், ராஜா, ராமு, சிவசங்கர், நாகம் மாள்காந்தி, துரைசாமி, காண்டாண்டி,மோகன்குமார், ராமதாஸ், வெங்கடேசன், ராஜேஷ் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகபொறுப்பாளர்கள், பாககளப்பணியாளர்கள், வட்டஇளைஞரணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

டி.காமராஜ் தலைமையில் முதல்வர் பிறந்தநாள்!

தாம்பரத்தில் 5000 பேருக்கு அறுசுவை உணவு!

எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ – வழங்குகிறார்!

தாம்பரம்.மார்ச்.1-

பகுதி கழகச் செயலாளர் 4.வது மண்டல தலைவர் டி.காமராஜ் அறிக்கை வருமாறு:

தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் மார்ச் 1 கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 1.03.2026 அன்று காலை 8 மணி அளவில் தாம்பரம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் மாண்பு மிகு தமிழக முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு 5000 பேருக்கு அறுசுவை உணவு அன்னதானம் வழங்கிடும் நிகழ்ச்சி பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் (எனது தலைமையில்) கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றிட தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்

இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர். துணை மேயர்,மாநகர பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,இளைஞர் அணி,மகளிர் அணி,மாணவர் அணி என அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் நிர்வாகிகளும் இணைந்து நாளை காலையில்

அனைத்து வட்டங்கள் தோறும் ஒளிஒலி அமைத்து கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாற்றார்களும் மகிழ்ந்திடும் வகையில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்து நடத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலத்தில் உள்ள 7 வார்டுகளில் ரூ.17 கோடியே 61 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகளிர் உடற்பயிற்சி கூடமும், VAO அலுவலகம், நியாய விலைக் கடை, நகர்புற ஆரம்ப சுகாதார மையம் மற்றும் உள்விளையாட்டு அரங்கம் கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், மாமன்ற உறுப்பினர் ஜெ. செல்வேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் கீதா அனந்தன், இரா.பாஸ்கரன், கோட்டீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

டி. கருணாநிதி தலைமையில் முதல்வர் பிறந்தநாள்!

107வது வட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

நே.சிற்றரசு – தயாநிதி மாறன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 1-

கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி வட்ட செயலாளர் டி.கருணாநிதி ஏற்பாட்டில் அண்ணாநகர் 107வது வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 107 வது வட்டத்தில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்ட செயலாளர் டி.கருணாநிதி தலைமையில் இன்று (1.3.2026) 600 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன் பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைசெயலாளர் கார்த்திக் மோகன், வட்ட செயலாளர், மாநில, மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி குட்பட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை வட்ட செயலாளர் டி. கருணாநிதி செய்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ.இரவிச்சந்திரன்
மார்ச் 1 (2021)

தளது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திருப்பனந்தாள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

திருப்பனந்தாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், நிலவள வங்கி தலைவர், சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலை தலைவர், திருவிடைமருதூர் வீட்டு வசதி வாரிய தலைவர், மாநில நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை வேளாண் விற்பனைக்குழு துணைத் தலைவர் என பல்வேறு பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.